யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 2022 உ.த | பொருளியல்

பெயர் / சுட்டெண் : ..... திரு.ந.விபுலன் B.A (Hons), M.A (Eco), PGDE, M.Ed, Dip.in.Agro

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

தேர்ச்சி 01 - பெருளியல் அறிமுகம்

01)

1. பொருளியல் ஓர் சமூக விஞ்ஞானமாகும் விளக்குக?
2. பொருளியல் ரீதியாக சிந்தித்தல் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
3. பொருளியல் மனிதன் என்றால் என்ன?
4. நுண்பாக பொருளியல், பேரினப் பொருளியல் ஒப்பிட்டு விளக்குக
5. பொருளியலில் நேர் பொருளியல், நியம பொருளியல் என்பதால் விளங்குவது யாது? உதாரணம் தருக.

02)

1. பொருளியலில் மனித தேவை மனித விருப்பம் என்றால் என்ன ? உதாரணம் தருக.
2. பொருளாதார பண்டம், பொருளாதாரம் மல்லாப் பண்டம் என்பவற்றை வரைவிலக்கணம் படுத்தி வேறுபடுத்தி காட்டுக.
3. பொருளாதார பொருள், இலவச பொருள், தீய பொருள் என்றால் என்ன?
4. சிறு குறிப்பு தருக
    a. பொருளாதார வளம்- பொருளாதாரமல்லா வளம்.
    b. மீள் உருவாக்கக்கூடிய வளம்-மீள் உருவாக்க முடியாத வளம்.

03)

1. பொருளியலில் நிலம் என்றால் என்ன ?அதன் பண்புகள் யாவை.
2. உழைப்பு என்றால் என்ன? அதன் பண்புகளை குறிப்பிடுக.
3. ஊழியநிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?
4. இலங்கையின் ஊழியப் படை என்பதை வரைவிலக்கணம் படுத்துக.
5. மூலதனம் என்றால் என்ன? அதன் பண்புகள் யாவை.

04)

1. சிறு குறிப்பு தருக
    a. நிலையான மூலதனம்
    b. சூழலும் மூலதனம்
    c. மனித மூலதனம்
    d. நிதி மூலதனம்
    e. இயற்கை மூலதனம்

www.ikeu.lk

2. மூலதனம் - முதலீடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைத் தருக.
3. மொத்த முதலீடு- தேறிய முதலீடு என்றால் என்ன?

05)

1. ஒருநாட்டின் மூலதன ஆக்கமூலகங்களை பட்டியல் படுத்துக .
2. சேமிப்பு -முதலீடு-மூலதனம் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக .
3. முயற்சியாளரின் பிரதான பணிகள் 4 தருக.
4. முயற்சியாளர்- முகாமையாளர் வேறுபாடுகளை தருக.
5. பின்வரும் ஒவ்வொன்றும் எவ்வித சாதன வகைகளை சேர்ந்தன என்பதை நிர்ணயிக்குக
    a) இரத்தினக்கற்கள்
    b) சட்டத்தரணி
    c) யுரேனியம்
    d) துறைமுகம்
    e) மிருகக்காட்சி சாலை
    f) கடற்கரை
    g) கணனி மென்பொருள்
    h) விவசாயி
    i) முடிவு பொருள் இருப்பு
    j) தூய காற்று சூரிய ஒளி

06)

1. காரணி செறிவு- உற்பத்தித்திறன் என்பதை வரைவிலக்கணம் படுத்தி உதாரணம் மூலம் விளக்குக.
2. தொழிற்பிரிப்பு -சிறப்புத் தேர்ச்சி என்றால் என்ன அதன் அனுகூலங்கள், பிரதிகூலங்களை.
3. தருக
4. ஊழிய வினைத்திறன் என்றால் என்ன? ஊழிய வினைத்திறனை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?

07)

1. அருமை, தெரிவு, அமைய செலவு என்பவற்றை வரைவிலக்கணபடுத்துக
2. சார்பு அருமை. முழு அருமை என்றால் என்ன?
3. உட்கிடை செலவு ,வெளிப்படை செலவு ,பொருளியல் செலவு என்பதை விளக்குக.
4. அமையச் செலவானது பூச்சியமாகவும், நேர்க்கணியமாகவும் காணப்படும் சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.

08)

1. அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் எவை?
2. சந்தை பொருளாதாரம், கட்டளை பொருளாதாரம், கலப்பு பொருளாதாரம் என்பவற்றின் பண்புகளை ஒப்பிட்டு அட்டவணைப்படுத்தி காட்டுக.
3. சந்தை பொருளாதாரம், கட்டளை பொருளாதாரம், கலப்பு பொருளாதாரத்தில் அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப்படும் முறைகளை சுருக்கமாக குறிப்பிடுக.
4. அடிப்படை பொருளாதார பிரச்சனை தோன்றுவதற்கான காரணங்கள் எவை ?
5. ஒரு பொருளாதாரத்தில் காணப்படும் நிறுவன ரீதியான அமைப்புகள் (அடிப்படைகள்) எவை?

www.lkedu.lk

09)

1. சுருக்கமாக விளக்கி உதாரணம் தருக
    a. சமூக சந்தைப் பொருளாதாரம்
    b. சமவுடமை பொருளாதாரம்
2. பொருளாதார முறையொன்றின் செயலாற்றலை மதிப்பிடும் நியதிகள் எவை?

10)

1. உற்பத்தி சாத்திய வளையி என்றால் என்ன? அதன் வரையறைகளை குறிப்பிடுக.
2. நிலையான சந்தர்ப்பச் செலவு, அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு,குறைந்து செல்லும் அமையச் செலவு என்றால் என்ன?
3. உற்பத்தி சாத்திய வளையில் பின்வரும் எண்ணக்கருக்களை குறித்து காட்டுக
    a) அருமை
    b) தெரிவு
    c) மாற்றுப் பயன்பாடு
    d) அமையச் செலவு.
    e) உற்பத்தி வினைத்திறன்
    f) வளஒதுக்கீட்டில் வினைத்திறன்.
    g) நிறை தொழில் மட்டம்
    h) குறை தொழில்மட்டம்
    i) வேலையின்மை
    j) பொருளாதார பின்னடைவு
    k) பொருளாதார வளர்ச்சி, வீழ்ச்சி
    l) நிகழ்கால மற்றும் எதிர்கால நுகர்வுக்குமிடையே வளப்பங்கீடு.

www.lkedu.lk

தேர்ச்சி 02 - கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி

01)
1. கேள்வி என்றால் என்ன ? கேள்வியை ஏற்படுத்த அவசியமான காரணிகள் எவை?
2. செயற்படு கேள்வி என்றால் என்ன?
3. தனிநபர் கேள்வி, சந்தைக்கேள்வி என்பவற்றை விளக்குக
4. கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளை குறிப்பிடுக

02)
1. கேள்வி விதி என்றால் என்ன? அதன் எடுகோள்கள் யாவை.
2. கேள்விச்சார்பு, கேள்விக்கோடு, கேள்வி அட்டவணை, கேள்விச் சமன்பாடு என்ற எண்ணக் கருக்களை சுருக்கமாக விளக்குக.
3. விலை விளைவு, பிரதியீட்டுவிளைவு ,வருமான விளைவு என்பவற்றை விளக்குக.
4. கிபன்பண்டம் ,வெப்லன் பண்டம் என்றால் என்ன?
5. கேள்வி தொகை மாற்றம். கேள்வி மாற்றம் என்றால் என்ன? வரைபட உதவியுடன் விளக்குக

03)
1. நெகிழ்ச்சி, விலைசார் நெகிழ்ச்சி என்பதை வரைவிலக்கணப்படுத்துக
2. புள்ளி விலை கேள்வி நெகிழ்ச்சி, வளைவு நெகிழ்ச்சி வேறுபடுத்திக்காட்டுக.
3. விலைக் கேள்வி நெகிழ்ச்சியின் வகைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் வரைபட உதவியுடன் விளக்குக.
4. விலை சார் கேள்வி நெகிழ்ச்சியை நிர்ணையிக்கும் காரணிகள் எவை?
5. விலை கேள்வி நெகிழ்ச்சி, நுகர்வோன் செலவு,உற்பத்தியாளர் செலவு, வருமானத் தொடர்பு என்பவற்றை விளக்குக

04)
1. விலை கேள்விநொகிழ்ச்சியின் முக்கியத்துவங்கள் குறிப்பிடுக.
2. குறுக்கு விலை கேள்விநொகிழ்ச்சி என்றால் என்ன? அதன் முக்கியத்துவத்தை குறிப்பிடுக
3. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்ச்சி என்றால் என்ன? இக்கேள்வியை தீர்மானிக்கும் காரணிகள் எவை?
4. வருமானக் கேள்வி நெகிழ்ச்சியின் முக்கியத்துவம் தருக.

05)
1. நிரம்பல் என்றால் என்ன? நிரம்பலை ஏற்படுத்துவதற்கு அவசியமாக உள்ள விடயங்களை எவை?
2. நிரம்பலை தீர்மானிக்கும் காரணங்களை பட்டியல் படுத்துக
3. நிரம்பல் விதி என்றால் என்ன? நிரம்பல் விதிக்கு அடிப்படையான காரணங்கள் எவை?
4. நிரம்பல் சார்பு, நிரம்பல் கோடு, நிரம்ப சன்பாடு, நிரம்பல் அட்டவணை என்ற எண்ணத் கருத்துகளை விளக்குக.
5. நிரம்பல் மாற்றம், நிரம்பல் தொகை மாற்றம் என்றால் என்ன? வரைபட உதவியுடன் விளக்குக.

www.ikeu.lk